பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

16 02 2026 MONDAY 6 30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- ஜனநாயக அமைப்புகளை வலுப்படுத்துவதில் வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மை முக்கியப் பங்கு வகிப்பதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

- உள்நாட்டிலேயே பாதுகாப்பு தளவாடங்களை உற்பத்தி செய்வதற்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

- தமிழகத்தில், நீதிமன்ற வளாகத்திலேயே பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

- வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

- குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் பனிச்சறுக்கு பிரிவில் இந்தியாவின் Arif Khan இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>><<<<<<

ஜனநாயக அமைப்புகளை வலுப்படுத்துவதில் வெளிப்படைத்தன்மை மற்றும் நேர்மை முக்கியப் பங்கு வகிப்பதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

இந்திய கணக்கு மற்றும் தணிக்கை சேவை உள்ளிட்ட பல்வேறு சேவை பயிற்சி அதிகாரிகளிடையே இன்று புதுதில்லியில் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

முதலீடுகளை ஈர்ப்பதிலும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் இந்திய வர்த்தக சேவை அதிகாரிகள் முக்கியப் பங்கு வகிப்பதாகவும் குடியரசுத்தலைவர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

உள்நாட்டிலேயே பாதுகாப்பு தளவாடங்களை உற்பத்தி செய்வதற்கு மத்திய அரசு ஊக்கமளித்து வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இன்று பெங்களூருவில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் திட்டங்கள் குறித்து அதிகாரிகள் மற்றும் விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆப்பரேஷன் சிந்தூரின் வெற்றியில் உள்நாட்டு பாதுகாப்பு தளவாடங்களின் பயன்பாடு முக்கியப் பங்கு வகித்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

பாதுகாப்பு படையில் அதிநவீன தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டியது அவசியம் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தினார்.

>>>>>>><<<<<<<

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதில் இந்தியா முன்னணியில் திகழ விருப்பம் கொண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறியுள்ளார்.

புதுதில்லியில நடைபெற்று வரும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்ப உச்சிமாநாட்டின் ஒரு பகுதியாக நடைபெற்ற விவாத நிகழ்ச்சியில் பங்கேற்று அவர் பேசினார்.

புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதில் இந்தியா முன்னணியில் திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

5ஜி சேவை, நாடுமுழுவதும் 90 சதவீதம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தொழில்நுட்ப பயன்பாட்டில் திறன்களை மேம்படுத்துவதற்கான பயிற்சி வழங்குவதற்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்துள்ளதாகவும் திரு. அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

>>>>>><<<<<<<

ரமலான் பண்டிகையை ஒட்டி, பள்ளிவாசல்களில் நோன்பு கஞ்சி தயாரிப்பதற்கு ஏதுவாக 8 ஆயிரத்து 700 மெட்ரிக் டன் பச்சரிசி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

இதன்மூலம் அரசுக்கு கூடுதலாக 20 கோடியே 88 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<<

தமிழகத்தில் திமுக அரசு பொறுப்பேற்ற பின்னர் 22 லட்சம் இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளதாக வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

அருப்புக்கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், இலவச வீட்டுமனைப் பட்டாக்களை பயனாளிகளுக்கு வழங்கி அவர் பேசினார்.

அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் திமுக அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதாகவும் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<<

தமிழகத்தில், நீதிமன்ற வளாகத்திலேயே பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக, பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஸ்ரீவில்லிப்புத்தூர் குடும்ப நல நீதிமன்றத்தில் நீதிபதி மீது அரிவாள் வீசப்பட்டதாக வெளிவந்துள்ள செய்தி அதிர்ச்சி அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

சட்டம் ஒழுங்கில் கவனம் செலுத்தவதை விட்டுவிட்டு, விளம்பரம் செய்வதிலேயே திமுக அரசு அக்கறை காட்டுவதாக அவர் குறை கூறியுள்ளார்.

சட்டப்பேரவை தேர்தலில் இதற்கு மக்கள் உரிய பதிலடி கொடுப்பார்கள் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

கனிம வளங்களை பாதுகாக்க திமுக அரசு தவறிவிட்டதாக பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், சேலம், ராணிப்பேட்டை உள்ளிட்ட ஆறு மாவட்டங்களில் 50 கருங்கல் குவாரிகளை புதிதாக திறக்க திமுக அரசு அவசர அவசரமாக ஒப்பந்தப் புள்ளிகளை கோரியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் அறிவிப்பு வெளியாவதற்கு முன்னதாகவே, குத்தகை வழங்குவதற்கான நடைமுறைகளை இறுதி செய்ய வேண்டும் என்ற நோக்கில், திமுக அரசு செயல்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

கனிம வளங்களை சூறையாடுபவர்களுக்கு திமுக அரசு துணை போவதாகவும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டதன் அடிப்படையில், ஆதிச்சநல்லூரில் உலகத்தரம் வாய்ந்த அருங்காட்சியம் அமைப்பதற்கான பணிகள் விரைவில் தொடங்கும் என்று மத்திய தொல்லியல் துறையின் திருச்சி மண்டல இயக்குநர் திரு. அறவாழி கூறியுள்ளார்.

இன்று ஆதிச்சநல்லூரில் இந்த அருங்காட்சியகம் அமையவுள்ள இடத்தில், வேலிகள் அமைப்பதற்கான பணிகளை தொடங்கி வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

(சவுண்ட் பைட - அறவாழி 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

தமிழகத்தில் கடந்த 15 தினங்களில் மட்டும் திமுக அரசு ஐயாயிரம் ஒப்பந்தப் புள்ளிகளை கோரியுள்ளது கண்டனத்திற்குரியது என்று அமமுக பொதுச்செயலாளர் திரு. டி.டி.வி. தினகரன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 50க்கும் அதிகமான கல்குவாரிகளுக்கான ஏலமும் அவசர கதியில் நாளிதழில் வெளியாகியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழக அரசியல் வரலாற்றில் இதுவரை இல்லாத அளவிற்கு திமுக அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் திரு. டி.டி.வி. தினகரன் அந்த அறிக்கையில் குற்றம் சாட்டியுள்ளார்.

>>>>>><<<<<<

டாஸ்மாக் பணியாளர்களின் போராட்டத்திற்கு தீர்வு காண முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், நேரடியாக தலையிட வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பணி நிரந்தரம், காலமுறை ஊதியம், ஓய்வூதியம் உள்ளிட்ட நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து அவர்கள் போராடி வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

காங்கிரஸ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலை சிறுத்தைகள் ஆகிய கட்சிகள் சார்பில் கூட்டாக இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் திரு. வீரபாண்டியன் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

வங்கக்கடல் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாகியுள்ளதாக தென்மண்டல வானிலை ஆய்வு மைய இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(Sound Byte - துரை - 38 Sec.)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

காஞ்சிபுரம் மாவட்டத்தில் இஸ்லாமிய பெண்களுக்கான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி. கலைச்செல்வி மோகன் இன்று வழங்கினார்.

>>>>>><<<<<<

நாமக்கல் மாவட்டத்தில் மாநில அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி. துர்கா மூர்த்தி இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

>>>>>><<<<<<

தருமபுரி மாவட்டம், நாகாவதி நீர்த் தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக இன்று முதல் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

திருப்பத்தூர் மாவட்டம், சின்னப்பள்ளிக்குப்பத்தில் உள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு மையங்களில் வசிப்பவர்களுக்கு, புதிதாக கட்டப்பட்டுள்ள 88 வீடுகளின் சாவிகளை, ஆட்சியர் திருமதி. சிவசௌந்தரவள்ளி பயனாளிகளுக்கு இன்று வழங்கினார்.

>>>>>><<<<<<

கடலூர் மாவட்டத்தில் போதைப்பொருள் புழக்கத்திற்கு எதிரான விழிப்புணர்வு வாகனத்தின் சேவையை ஆட்சியர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

தேனி மாவட்டத்தில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட முயன்ற 3 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>>><<<<<<

கடலூர் மாவட்டம், திட்டக்குடி அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

>>>>>><<<<<<

சென்னை - ராமேஸ்வரம் இடையேயான சேது எக்ஸ்பிரஸ் விரைவு ரயில், வரும் 20ஆம் தேதி தொடங்கி, ஏப்ரல் மாதம் 6ஆம் தேதிவரை தாம்பரத்திலிருந்து புறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளின் பனிச்சறுக்கு பிரிவில் இந்தியாவின் Arif Khan இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இத்தாலியின் Milano Cortina-வில் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல் சுற்றில் 44வது இடத்தைப் பிடித்து அவர் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

>>>>>><<<<<<

தில்லி ஓப்பன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Manish Sureskumar பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு தகுதிச் சுற்று ஆட்டத்தில் அவர் 6-3, 7-5 என்ற செட்கணக்கில் கொரியாவின் Uisung Park-ஐ வென்றார்.

பெங்களூரு சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி பிரதான சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

>>>>>>END<<<<<<<